25906

JAFFNA COLLEGE 18 AUG 1971 UNDERGRADUATE LIBRARY

# முஜிபுருக்கு எதிரான விசாரணையை நிறுத்துக!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தொலைபேசி எண் 49 / கிளை 389 — தேசிய தினசரி — மலர் 13 இதழ் 186

யாழ்ப்பாணம் ஆவணி 2 ஜ: ஆண்டு 26 புதன்கிழமை (18-8-71)

## இலங்கை வழக்கறிஞர்கள் யாஹ்யாகானுக்கு தந்தி

கொழும்பு, செவ்வாய் கிழக்குப் பாகிஸ்தான் அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு எதிராக நடைபெற்றுவரும் இரகசிய நீதிமன்ற விசாரணையை நிறுத்தும்படி கோரி இலங்கையைச் சேர்ந்த 200 பிரபல வழக்கறிஞர்கள் பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகானுக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். இதன் பிரதியை இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதுவரிடம் இன்று அவர்கள் கையளித்தனர்.

முஜிபுர் ரஹ்மானுக்கு எதிரான விசாரணையை நிறுத்தும்படி அனுப்பப்பட்ட தந்தியில் கருவாளர்கள் என். ஈ. வீரசூரிய கியூ. ஸி., ஈ. பி. விக்கிரமநாயக்கா கியூ. ஸி., எஸ். ஜ. அதர் உமர் கியூ. ஸி., எஸ். டபிள்யூ. ஜெயசூரிய கியூ. ஸி., திரு சிறி பெரேரா கியூ. ஸி., சி. ரங்கநாதன் கியூ. ஸி., பி. நவரட்ணராஜா கியூ. ஸி., பேராசிரியர் ரி. நடராசா (பல்கலைக்கழகச் சட்டப் பிரிவுத் தலைவர்), ஆர். கே. டபிள்யூ. குணசேகரா (சட்டக்கல்லூரி அதிபர்), இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத் தலைவர் திரு ஈ. ஆர். எஸ். குமார

(6-ம் பக்கம் பார்க்க)

# டாக்டர் நாகநாதன் காலமானார்

## பூதவுடல் நாளை கொழும்பில் நல்லடக்கம்



(நமது சிறப்பு நிருபர்)

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர்களில் ஒருவரும், நல்லூர்த் தொகுதியின் முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினருமான டாக்டர் இ. எம். வி. நாகநாதன் காலமானார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சென்ற சில தினங்களாக கடும் சுகவீனமுற்றிருந்த டாக்டர் நாகநாதனின் ஆவி சென்ற திங்கட்கிழமை நள்ளிரவு அமைதியாகப் பிரிந்தது. அவரது மனைவி மக்கள் நண்பர்கள் அவர் அருகே இருந்தனர். அவருக்கு வயது 66.

டாக்டர் நாகநாதனின் பூதவுடலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து அவருக்கு மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்கு வாய்ப்பளிப்பதற்கான முயற்சிகளை தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளரும், மற்றும் வடபகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் சிலர், தமிழரசு வாலிபமுன்னணியினர் ஆகியோரும் மேற்கொண்டிருந்தனர். ஆயினும் குடும்பத்தினரின் விருப்பப்படியும் அவர்கள் தொடர்ந்து நிறைவேற்றவேண்டிய மதச்சடங்குகளின் வசதி காரணமாகவும் யாழ்ப்பாணத்துக்கு பூதவுடலைக் கொண்டுவருவதும், யாழ்ப்பாணத்திலேயே அடக்கம் செய்வதற்கான முயற்சிகளும் ஈற்றில் கைவிடப்பட்டன.

### நாளை கொழும்பில அடக்கம்

டாக்டர் நாகநாதனின் பூதவுடல் நாளை 19ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு கொழும்பில் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் நேற்றுப் பிற்பகல் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். தமிழரசுக் கட்சிப்பிரமுகர்களும்வாலிப முன்னணியினர் பலரும் நேற்றே கொழும்புக்குப்புறப்பட்டுச் சென்றனர்.

நம்மலப் பிட்டி லுள்ள டாக்டர் நாகநாதனின் இல்லத்துக்கு அரசியல் தலைவர்களும், வைத்தியத்துறையைச் சேர்ந்தவர்களும், வழக்கறிஞர் ஆகிய பலரும் நேற்று அதிகாலை தொடக்கம் சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி வந்தனர்.

### துண்டுப் பிரசுரங்கள்

டாக்டர் நாகநாதனின் மரணச்செய்தி கிடைத்ததும் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டன. அவரின் மரணச் செய்தியைத் தெரிவிக்குமுகமாக அவரது உருவப்படம் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டன.

(5-ம் பக்கம் பார்க்க)

## அவர் எழுதிய கடைசிக் கடிதம்

டாக்டர் நாகநாதன் சொந்த முறையில் தமக்கு ஏற்படும் தோல்விகளை ஒருபோதும் பெரிதாக மதித்ததில்லை. தமிழ்மக்களின் நிலை குறித்துதான் எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் டாக்டர் நாகநாதன் யாழ்ப்பாணத்திலுள்ள தமது நண்பர் ஒருவருக்கு கடைசியாக எழுதிய ஒரு கடிதத்தில் இந்த உண்மையைத் தெளிவாகக் காணக்கூடியதாக விருக்கின்றது.

டாக்டர்தமது நண்பர்ஒருவருக்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

தென்னிந்திய ஆலயங்களைத் தரிசித்துவிட்டு எனது மனைவி, இரு புதல்வர்கள், மகள் முதலியவர்களுடன் நேற்றுத்தான் நாடுதிரும்பினன். பிரயாணம் சிரமமாக இருந்தது. ஆனால் நான் பெரிதும் களைப்படைந்திருந்த போதிலும் அதனைமிகவும் அனுபவித்து மகிழ்ந்தேன்.

தேர்தலில் ஏற்பட்ட தோல்வி பற்றி அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

எதிர்பாராத விதமாக எனக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து சொந்த முறையில் நான் அதிகம் கவலை கொள்ளவில்லை. ஆனால் எனது நண்பர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள் போன்றவர்களால் வெற்றியைக் கொண்டாட முடியாமல் போனதற்காகவே மிக மிக வருந்துகிறேன். தங்களுக்கு பெரும் இழப்புகளை ஏற்படுத்திக்கொண்டு தன்னலமின்றி நாட்டுப்பற்றோடு பெரும்பாடுபட்டு உழைத்த அவர்களுக்கு நிச்சயம் வெற்றி கிடைத்திருக்க வேண்டும்".

## எஸ்.ஜே.வி. - தொண்டமான் அனுதாபச் செய்தி

கொழும்பு, செவ் "டாக்டர் நாகநாதன் இந்தியாவில் இருந்திருந்தால் உலகத் தலைவர்களுள் ஒருவராக பிரகாசித்திருப்பார்" என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்று காலை விடுத்த ஓர் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டார்.

இங்கிலாந்தில் கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் இலங்கைக்கு வராமல் இந்தியாவுக்கே திரும்பிப் போயிருந்திருப்பாராகில் அவர் சர்வதேச பிரமுகராகப் பிரகாசித்திருக்க முடியும். என்று திரு செல்வநாயகம் வேலை தெரிவித்தார்.

தமிழர்கள் தங்களின் துணிச்சல் மிக்க போராட்ட வீரரை இழந்து விட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

டாக்டர் நாகநாதன் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்திருந்த போதிலும் தோட்டப்பகுதி தமிழர்கள் உட்பட சகல தமிழர்களுக்காகவும் பாடுபட்டார் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் விடுத்த ஒரு செய்தியில் குறிப்பிட்டார்.

அவர் மறைவு எல்லாத் தமிழர்களுக்குமே பேரிழப்பாகும் என்றார் அவர்.

சி. பி. ஏ

### தங்குமிட வசதி

இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக பிற இடங்களிலிருந்து வருபவர்களுக்கு கொழும்பில் தங்குமிட வசதி இலவசமாகச் செய்து கொடுக்கப்படும் என்றும். கொழும்பு புகையிரத நிலையத்தில் வைத்து இதற்கான ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் என்றும் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒரு

6-ம் பக்கம் பார்க்க

## நாளை நல்லூர் தேர் உற்சவம்
## பொலிசாரின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன் இம்முறை நல்லூர் உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்கள் ஒழுங்காகவும் பக்தி சிரத்தையுடனும் எதுவித சிரமமுமின்றி நடந்துகொள்கிறார்கள் இதனால் பொலிசாருக்கும் தம் கடமையை எளிதாக செய்ய முடிகிறது என்று வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர் சுந்தரலிங்கம் கூறினர்.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கைலாச வாகன திருவிழாவின்போது பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதிலும் ஒரேயொரு சிறு சம்பவத்தைத்தவிர எதுவித அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்றும் மக்கள் ஒழுங்காகவும் அமைதியாகவும் நடந்துகொண்டார்கள் என்றும் அவர் சொன்னர்.

அடுத்துவரும் விழாக்களின் போது பக்தர்களின் தொகை அதிகரிக்கும் என்பதால் பொலிஸ் காவல் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், சாதாரண உடையணிந்த பொலிஸாரும் பணிபுரிவார்கள் எனவும் தெரிவித்த பொலிஸ் அதிபர் திரு. சுந்தரலிங்கம், பாதையினில் கார்களை நிறுத்துவோரை அவைகளைப் பூட்டிப் பாதுகாப்பாக வைக்கும்படியும் கேட்டுள்ளார்.

6-ம் பக்கம் பார்க்க


REGAL Jaffna
Daily at 5-15 & 7-15 p. m. only
Saturday & Sunday 10-30 a. m.
Client East wood in
HANG EM HIGH (color)

ரீகல் யாழ்ப்பாணம் தினசரி பி. ப. 2-00 இரவு 9 45 மட்டும்
இப்பொழுது நடைபெறுகிறது
ரவிச்சந்திரன் — விஜயநிர்மலா
நாகேஷ் நடித்த
சத்தியம் தவறாதே

ராணி (யாழ்ப்பாணம்) சுந்தரராஜன் • நாகேஷ் • சௌகார்ஜானகி • லக்ஷ்மி
பி.ப. 2-30 இரவு 6-30, 10-00 நடித்த
கஸ்தூரி திலகம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்
அசோகன், ஜோதிலட்சுமி, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
தலைவன்

இன்று (18-8-71) முதல்
வெலிங்டன் (யாழ் நகர்) ரிகோ (யாழ் நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 மணி | காலை 10-30, பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30
மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா—மைலன்
திரைகளில்
நடிகர் திலகம்
★ சிவாஜிகணேசன் (3 வேடங்களில்)
★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ நம்பியார்
★ சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்
தெய்வ மகன்
திரைக்கதை — டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்


### கேள்வி விளம்பரம்
### மெலிஞ்சிமுனை மீனவர் வீதி

மேற்படி வீதி வேலைக்கு நாரந்தனைக் கிராமசபைத் தலைவரால் 1971-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணி வரையும் விதலநா பனைகுதியால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 27-8-71-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் பணம் ரூபா 10/-ம், கேள்விப்பத்திரப் பிணைப்பணம் ரூபா 25/-ம் செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும். கேள்விப் பத்திரப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மேலும் விபரங்கள் அறிய விரும்பின் வேலை நிறைவேற்றுப் பொறியியலாளர் கந்தோரிலும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கந்தோரிலும் அறிந்துகொள்ளலாம்.

த. சண்முகலிங்கம்,
தலைவர்
கிராமசபை,
நாரந்தனை.

கிராமசபைப் பணிமனை,
நாரந்தனை,
ஊர்காவற்றுறை.
16-8-71. 2968


வெல்லிங்டன் வாணிப்பாய்
பி. ப. 2-30, 6-30, 10-00
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
அன்பே வா

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி 4 30க்கு மட்டும்
சனி, ஞாயிறு: காலை 10-30
Jim Brown
in
100 RIFLES
தினசரி மாலை 6-30, 9-45
சனி, ஞாயிறு 2 30, 6-30, 9-45
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நம்பியார்
நடித்த
ஆசை முகம்

MANOHARA- Jaffna
Daily
4-45, 7-00 & 9-45 p.m.
Saturday, Sunday 10-30A.M
John Philip Law
in
DANGER DIABOLIC
(TechniColor)


பிஸ்கால் இல: 45/71

### பிஸ்கால் கொமிசன் விற்பனை

வழக்கு இலக்கம்: 2512

பிரதி பிஸ்கால் அலுவலகம், வவுனியா. 11 ஓகஸ்து 1971 வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில்

பொன்னையா கந்தையா ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை. வழக்காளி

விரோதமாக

நொச்சிக்குளம் காலம் சென்ற சுவாமிநாதன் செல்லையாவின் சட்டப் பிரதிநிதி செல்லையா சுவாமிநாதன், நொச்சிக் குளம் ஓமந்தை

எதிராளி

இதன் கீழ் காணப்படும் ஆதனத்தில் மேற்சொல்லிய வழக்கில் எதிரிக்கு உடைமை உரித்தையும் பிரவேசனத்தையும் 1971-ம் ஆண்டு செத்தம்பர் மாதம் 15-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரசித்த வெந்திசில் கீழ்க் காணும் தொகையை அறவிடுவதற்கு விற்கப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தெற்கு கிழக்கு மூலை வடக்கு நொச்சிக்குளத்திலுள்ள "சின்ன தெற்பில" என்னும் ஆதனம் இதன் விஸ்திரணம் 5 புசல் நெல்லு விதைக்கும் தரை.

இதன் எல்லைகள்

கிழக்கு: பொன்னர் செல்லையாவிற்கும் மறு பேருக்கும் உரிய ஆதனம்.
வடக்கு: ஆறுமுகம் குமாரசாமிக்கு உரிய ஆதனம்.
மேற்கு: மருசுவெலி.
தெற்கு வேலாயுதம் வள்ளிபுரத்தின் உடுத்தாளடுக்கு உரிய ஆதனம்.

அறவிடப்படும் தொகை

சட்டு முதல்: ரூபா 1661/- வட்டி: 5-8-70 தொடக்கம் 16-12-70 வரைக்கும் ரூபா 1100/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகையும் அறவிடும் வரை 5 வீத வட்டி.

பிஸ்கால் கட்டணமும் பவுண்டேச்சும் அறவிடப்படும்.

ஆ. குணநாயகம்,
மேலதிக பிரதி பிஸ்கால்.
2962

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் சொப் பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

**விற்பனைக்கு**

வேலணை மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன் பாகவுள்ள 21 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: அம்பாள் ரெக்ஸ் ரைக்ஸ். யாழ்ப்பாணம், ச. நா. மயில்வாகனம், வேலணை-1. 3475

வாட்டர் பம்பு, பிறேமா போசனசாலை 238 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் பார்வையிடவும். 3476

1972க் ஆண்டு பொது விசேஷ ஆசிரியர் பயிற்சி தெரிவுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கும். ஒவ்வொன்றும் ரூபா 1/- பூனைட்டெட் இன்ஸ்டியூட் நெல்லியடி. கரவெட்டி 3477

ராஜா தசாங்கம்!
கோவில்களிலும், விழாக்களிலும் வீட்டில் தூபமிடுவதற்கும் உபயோகமானது. சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார்தெரு, கொழும்பு. 3410

48'X13'X6' இனம் சனம் கொண்ட தோணி கூடு ஒன்று 6'X1/2" கம்பி வலையும் 24X10" தும் 24X6" உள்ள தராக்கான் கரையும் மரங்களும் இதைவிட 28 யார் 1" கம்பி வலையும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க் காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும் வே. முருகேசு, தெடுக்காடு, காரைநகர். 3480

ஆசிரியர் பயிற்சி அனிக்கப் படுவதற்கான பயிற்சியாளர் தெரிவுக்கு விண்ணப்பப் பத்திரங்கள் பொதுப் பயிற்சி / விசேட பயிற்சிக்கான பத்திரங்கள் தனித்தனியாகக் கிடைக்கும். அரசாங்க வர்த்தமானியில் காட்டப்பெற்ற மாதிரிப் பத்திரங்களின்படி, குறிப்பிட்ட அளவில் அச்சிடப்பெற்றவை. ஒரு பிரதி சதம் 30 ஆனந்தா அச்சகம், 226 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3479


ராஜா யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10-00 மணி
★ எம். ஜி. ஆர்.
★ வைஜந்திமாலா
★ பாலையா
நடித்த
பாக்தாத்திருடன்
(புதிய கொப்பி)

### அதிபர் நிக்ஸனின் பொருளாதார நடவடிக்கை:

# உலக நாடுகளில் பரபரப்பு; வங்கிகள் ஸ்தம்பிதம்

## பிரிட்டிஷ் மந்திரிசபை அவசரக் கூட்டம்

லண்டன், ஆகஸ்ட் 17

அமெரிக்க பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும், டாலர் நாணயத்தின் பெறுமதியை நிலைநிறுத்தவும் அதிபர் நிக்ஸன் எடுத்துள்ள அவசர நடவடிக்கைகள் உலக நாடுகள் பலவற்றிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பலநாடுகளின் மந்திரி சபைகள் அவசரமாகக்கூடி அதிபர் நிக்ஸனின் நடவடிக்கையால் தாங்கள் எவ்வாறு பாதிக்கப்படுவர் என்று ஆலோசிக்கத் தொடங்கியுள்ளன.

அனேக நாடுகள் தங்கள் வெளிநாட்டு செலாவணி கொடுக்கல்வாங்கல்களை நிறுத்திவைத்துள்ளன.

பிரிட்டனின் பிரதமமந்திரி திரு ஹீத் அவசரமாகத் தமது மந்திரிசபையை அழைத்து ஆலோசனைகள் நடத்தினார்.

10 தொழில் வளர்ச்சிநாடுகளின் மகாநாடொன்றைப் பிரிட்டன் அழைத்திருக்கின்றது.

ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள் அவசரமாக கூடி அதிபர் நிக்ஸனின் நடவடிக்கையால் ஏற்படும் விளைவுகள் பற்றி ஆலோசிக்க விருக்கின்றன.

அதிபர் நிக்ஸனின் நடவடிக்கைக்கு அமெரிக்க காங்கிரஸ் சபையில் பொதுவாக வரவேற்பு இருக்கின்றது. நாளைய தினம் இதுபற்றி ஆலோசிப்பதற்காக அதிபர் நிக்ஸன் காங்கிரஸ் சபையிலுள்ள ஜனநாயக, குடியரசு ஆகிய இருகட்சி அங்கத்தவர்களையும் அழைத்திருக்கிறார்.

ஒரு சில காங்கிரஸ் உறுப்பினர்கள் அதிபர் நிக்ஸனின் நடவடிக்கைகளைக் குறை கூறியிருக்கிறார்கள். ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் இது பொருளாதார பைத்தியகாரத்தனம் என்று விபரித்தார்.

லண்டனிலுள்ள பொருளாதார நிபுணர்களுடன் ஆலோசிப்பதற்காக அதிபர் நிக்ஸனின் பிரதிநிதி ஒருவர் லண்டனுக்கு வரவிருக்கிறார்.

பிராங்கஸ் தனது தங்க மார்க்கட்டை மூடியிருக்கிறது. பிரிட்டன் வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல்களை நிறுத்தியுள்ளது. தங்கம் உற்பத்தி செய்யும் பெரியநாடான தென்னாபிரிக்காவும் வெளி செலாவணி வர்த்தகத்தை நிறுத்தி வைத்துள்ளது.

மத்தியகிழக்கு நாடுகளிலும் அமெரிக்க டாலர் சம்பந்தமான அதிபர் நிக்ஸனின் நடவடிக்கைகள்பற்றிய பிரச்னை எழுந்துள்ளது. இஸ்ரேலிய மந்திரிசபை இது பற்றி ஆலோசிக்க கூடவிருப்பதாகத் தெரிகின்றது.

வெளிநாட்டு டாலர்களையிருப்புகளில் டாலருக்குப் பதில் தங்கம் கொடுக்கப்படும் என்ற ஏற்பாட்டை அதிபர் நிக்ஸன் நிறுத்தி வைத்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் சகல பொருட்களுக்கும் 10சதவீதவிசேஷ வரி விதிப்பையும் அதிபர் அறிவித்துள்ளார். உள்நாட்டின் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கவும் அதிபர் நிக்ஸன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வெளிநாடுகளுக்கான உதவிகளில் 10 சதவீதம் குறைப்பதற்கு அவர் எடுத்துள்ள நடவடிக்கை சர்வதேசரீதியில் பாதிக்கக்கூடியதுஎன்று கருதப்படுகின்றது.

## பாரதப் பிரதமருடன் கென்னடி ஆலோசனை

புதுடில்லி, ஆகஸ்ட் 17

தற்பொழுது இந்தியாவில் விருந்தாளியாக வந்திருக்கும் செனட்டர் கென்னடி நேற்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப்பேசினர். சுமார் 40 நிமிடங்கள் இருதலைவர்களும் ஆலோசனைகள் நடத்தினர்கள். அதற்குமுன்பாக வெளி உறவு அமைச்சர் திரு சுவரண்சிங்கையும் செனட்டர் கென்னடி சந்தித்து சுமார் 45நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தார்.

அகதிகள் முகாம்கள் வழியாக சில தினங்களுக்குமுன் பகல் முழுவதும் நடந்த களைப்பையும் பொருட்படுத்தாமல், செனட்டர் எட்வர்டு எம் கென்னடி இரண்டாவது நாளாகவும் கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளை நேரில்பார்த்து பேசினார்.

கொட்டும் மழையையும் மீறி, முழங்கால் அளவுச் சேற்றில் நடந்து சென்று, மேற்கு வங்காளத்திலுள்ள பராஸத் ஸஹாரா, கல்யாணி வட்டாரங்களிலுள்ள அகதி முகாம்களையும், மருத்துவ மனைகளையும் பார்வையிட்டார். ஸஹாராவில் அவர் வறுமை ஒழிப்பு இயக்கத்தினர் நடத்தும் மருத்துவ மனையையும் பராஸத்தில் காஸா ரக்ஷண்ய சேனை நடத்தும் மருத்துவ மனையையும் கல்யாணியில் சேவ் த சில்ரன் பண்ட் நடத்தும் அகதிகள் முகாமையும் பார்வையிட்டார்.

கிட்டத்தட்ட ஏழு மணி நேரம் நீடித்த இந்தச் சுற்றுப்பயணத்தில் பெரும்பகுதியும் மருத்துவமனை நோயாளிகளுடனும் அகதிகளுடனும் அவர் பேசினார். மருத்துவ வசதிகள் பற்றியும் அகதிகளுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் வழங்கப்படும் உணவு பற்றியும் செனட்டர் கென்னடி கேட்டார்.

செவ்வாயன்று போலவே, கென்னடி பலவேறு முகாம்களையும் பார்வையிடுகையில் அகதிகள் ஆயிரக்கணக்கில் கூடி நின்றுஅவரை நேரில் வரவேற்றனர். 'ஜெய், பங்களா', 'கென்னடி, வருக' 'ஜெய், எட்வர்டு கென்னடி' என்று முழக்கம்செய்தஅவர்கள், அவருக்கு நல்வரவு கூறினர்.

### சில்லி நாட்டில்

## எரிமலை வெடித்ததால் 250 பேரைக்காணும்!

சந்தியாக்கோ, ஆக. 17

சில்லிநாட்டில் எரிமலை வெடிப்புகளின் காரணமாக சுமார் 250 பேரைக்காணவில்லையாம்.

சில்லியின் தென்பகுதியிலுள்ள மலைப்பகுதியில் தொடர்பாகப் பல எரிமலைகள் வெடிக்கத் தொடங்கியுள்ளன. இதனால் அப்பகுதியிலுள்ள பல கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

மலைகளின் உச்சியிலிருந்து வெடித்துக் கிளம்பியும் தீக்குழம்புகள் சரிவுகளில் வழிந்தோடுகின்றன. இதனால் ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஓர் இடத்தில் சுமார் 80 பேர் தீ குழம்புகளால் சூழப்பட்டிருப்பதாக விமானத்தில் சென்றவர்கள் பார்த்துவிட்டுவந்து தெரிவித்தனர். மலைகளின் உச்சியில் நச்சுப் புகை வெளியேறிக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இப்பகுதியில் வாழும் மக்களில் சுமார் 250 பேர் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. அவர்களைத் தேடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எரிமலைகளிலிருந்து கிளம்பும் ஜுவாலையின் உஷ்ணம் காரணமாக வேறு மலைகளில் உறைந்து கிடந்த பனிப் பாறைகள் உருகி பெரும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளன

### ஹொங்கொங்கில் 80 பேர் பலி

ஹொங்கொங், ஆக 17

ஹொங்கொங்கில் நேற்று 160 கிலோ மீட்டர் வேகத்தில் புயல் வீசியதில் சுமார் 80 பேர் வரை பலியாகியுள்ளனர்.

துறைமுகத்தில் நின்ற பல கப்பல்கள் புயலின் காரணமாகத் தரைதட்டியுள்ளன.

ஹொங்கொங் நகரை இரண்டாவது தடவையாகவும் தாக்கியுள்ள இப்புயல் இப்பொழுது சீனாவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது

## 460 கோடிவயது நிலவுக்கல்: மாபெரும் விஞ்ஞான அறுவடை!

— வால்டர் ஃபிராலிக் —

வாஷிங்டன், ஆக. 17

அப்பலோ-15 விண்வெளி விமானிகள், நிறைய அம்புலிக் கற்களைப் பூமிக்குக் கொண்டுவந்திருக்கின்றனர் அல்லவா? சில மூட்டைகளைப் பிரித்து அமெரிக்க விஞ்ஞானிகள் அவசரமாகப் பார்த்ததும், முதல் பார்வையிலேயே அவர்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டனர். ஆனால் இந்த மாதிரி கற்களைப் பற்றி ஏற்கனவே இருந்துவரும் உறுதியான கருத்தில்லாமை இன்னும்கூடவே செய்தது.

இந்த விஞ்ஞானிகளில் இருவர் செய்தியாளர்களைச் சந்தித்து அரைமணி நேரம் பேசினர். தூசி மூடியிருக்கும் மாதிரிப் பொருள்களிலே 'கரப்புக் கண்ணாடி போன்ற' ஒன்று உள்ளது என்றும், இதற்கு முன்னர் அம்புலியிலிருந்து வந்த பொருள்களில் இதுமாதிரி பார்த்ததே இல்லை என்றும் கூறினர். ஒரு அடி நீளமிருக்கும் இந்த மாதிரிப்பொருளை தூசி போக்கித் துடைத்த பின்னர் தான் உண்மையிலேயே அது கண்ணாடிதானா என்பது தெரியவரும்.

மாதிரிப் பொருள்களில் ஒன்று விண்வெளி வீரர்களுக்கு கிளர்ச்சியூட்டியது என்றும் ஏனெனில் இதன் வயது 460 கோடி ஆண்டுகள் என நம்பப்படுகிறது என்றும் இந்த விஞ்ஞானிகள் கூறினர்.

அம்புலிக் கற்கள் அடங்கிய மூட்டைகளைப் பிரிக்கையில் விஞ்ஞானிகளின் அருகில் அப்பலோ-15 விண்வெளி வீரர்களும் நின்று கொண்டிருந்தனர். இந்த விண்வெளி வீரர்களுக்குக் குவாரன்டைன் போடவில்லையா? அதனால்தான் அவர்கள் அங்கு நிற்க முடிந்தது.

அம்புலி வீரர்கள், இந்த அம்புலிக் கற்களை எங்கெங்கு கண்டனர், அவற்றின் நிலை என்ன? சூழ்நிலைகளின் இயல்பு எப்படி என்றெல்லாம் விண்வெளி வீரர்களிடமிருந்தே நேரில் கேட்டறிவது பயன்மிக்கது என்று விஞ்ஞானிகள் விளக்கினர்.

தாங்கள் கொண்டு வந்தவை மாதிரி கற்கள் பற்றிய விபரங்கள் எல்லாம் தங்களுக்கு நன்றாக நினைவு இருக்கின்றன என்று விண்வெளி வீரர்கள் கூறியதாக டாக்டர் டியூக், டாக்டர் பின்னி ஆகிய விஞ்ஞானிகள் இருவரும் தெரிவித்தனர்.

அப்பலோ-15 மாதிரி அம்புலிக் கற்கள் கொண்ட இரண்டு பெட்டிகளிலே முதல் பெட்டியில் துளையிட்டு சிலவாயு துகள்களை எடுத்தனர். பின்னர் ஆராய்ந்தனர். சூரியக் காற்று பற்றியும் அம்புலியின் உள்ளிலிருந்து சிறுசிறு அளவில் வெளிவரும் வாயுக்கள் பற்றியும் புதிய தகவல்களை இந்த ஆராய்ச்சி தரக்கூடும்.

இந்தச் சோதனையை இரண்டாவது பெட்டியில் நடத்த முடியாது. பெட்டி ஹூஸ்டனுக்கு வருவதற்கு முன்னர் அதில் இருந்த முத்திரை உடைந்துபோய் பூமியின் காற்று அதற்குள்ளே புகுந்துவிட்டது என்றும் இது கற்கள் பற்றிய பிற ஆராய்ச்சிகளைப் பாதிக்

(4-ம் பக்கம் பார்க்க)

359-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பு

359-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பு 1971 ஆகஸ்ட் 18-ந் திகதி புதன்கிழமை மாலை 5-15 மணிக்கு நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் மைதானத்தில் நடைபெறும்

இன்றே ஒரு தேசிய லொத்தர் டிக்கெட்டை வாங்கி ஒரு இலட்சம் (1,00,000) ரூபாவைப் பரிசாகப் பெறுங்கள்.

தேசிய லொத்தர் சபை

# நம் ஆபரணக்கலையைவெளி நாடுகளில் பரப்பவேண்டும்

— நல்லூர் எம். பி.

இணுவில், செவ்.

இங்குள்ள ஆபரணக்கலை உலகின் பலநாடுகளைக் கவர்வதாகவும் அவர்களின் வரவேற்பைப் பாராட்டத்தக்கதாகவும் உள்ளது. எனவே இக்கலைமூலம் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்வதுடன் வெளிநாடுகளிலும் இதைப் பரப்பவேண்டும்.

யாழ் ஆபரணத் தொழிலாளர் மத்தியில் உரையாற்றுகையில் நல்லூர்த்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி அருளம்பலம் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இங்குள்ள இரத்தினங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஆபரணங்கள்செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் பெருந்தொகையான அன்னிய செலாவணியை நாம் பெறலாம் அதன் மூலம் இத்தொழிலை விஸ்தரிக்கலாம் தொழிலாளர்க்கும் உதவலாம்.

இத்தொழிலுக்கான உபகரணங்கள் தற்போது இறக்குமதியில்லை ஆகவே முதன்முதலாக இவ்வுபகரணங்களைப் பெறுவதற்கு வழிவகைசெய்யவேண்டும் என மேற்படி ஆபரணத்தொழிலாளர்கள் எம் பியைக் கேட்டுள்ளனர்.

## பீடி இலை தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், புதன்

பீடி இலை தட்டுப்பாட்டினால் வடபகுதியில் நூற்றுக்கணக்கான பீடிக் கைத்தொழிலாளர்கள் கடந்த சில வாரங்களாக வேலையின்றி கஷ்டப்பட்டு வருகின்றனர்.

பாஷையூர் மக்கள்முன்னேற்ற சங்கத்தின் பீடித் தொழிற்சாலையில் வேலை செய்யும் சுமார் 80 பெண்கள் சார்பில் இதுபற்றி யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா விடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிலையே நம்பியிருக்கும் எத்தனையோ குடும்பங்கள் பீடிஇலைத் தட்டுப்பாட்டினால் கஷ்டப்படுவதாகவும் விரைவில் பீடிஇலை பெற்றுத்தர உதவி செய்யும்படியும் மேலும் கூறப்பட்டுள்ளது.

## அமைச்சர்கள் விஜயம்

சாய்ந்தமருது, செவ்வாய்

கல்வியமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத், காணி நீர்ப்பாசனமின்சக்திபெருந்தெருக்கள் உதவிஅமைச்சர் திரு சேனரத் சோமரட்ன, தகவல் ஒலிபரப்பு உதவி அமைச்சர் ஜனாப் ஏ எச் ஏ மஜீத், கல்முனை எம் பிஜனாப் எம் சி அகமது ஆகியோர் விரைவில் பொத்துவிலுக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர்

இவர்களுக்கு வரவேற்பு அளிக்க பொத்துவில் லங்கா சுதந்திரக்கட்சிக் கிளையினர் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்

## தவறான நபரை கைது செய்தாராம்

மட்டுவில், திங்கள்

தவறான நபர் ஒருவரை கைதுசெய்து காவலில் வைத்த குற்றத்துக்காக சாவகச்சேரி மாவட்ட நீதவான், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கடுமையாக எச்சரித்து அனுப்பினார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஆறுமுகம் நாகலிங்கம் என்பவரைக் கைதுசெய்யும்படி நீதிமன்றம் பிறப்பித்த பிடிவிறாந்தைத் தொடர்ந்து கிளிநொச்சி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பசுபதி நாகலிங்கம் என்பவரைக் கைதுசெய்து சாவகச்சேரி மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்தார்.

சாவகச்சேரி மாவட்ட நீதவான் திரு. சி ஜே. இராஜரத்தினம், பொலிஸ் கான்ஸ்டபிள் செய்த தவறைச் சுட்டிக்காட்டி, இப்படி செய்வது பொலிஸ் அட்டூழியத்திற்கே அவமானம் என்று குறிப்பிட்டு, கான்ஸ்டபிளை கண்டித்து அனுப்பியதுடன் பிரஸ்தாப நபரையும் விடுதலைசெய்தார்.

## நிர்வாகிகள்

உடுப்பிட்டி, செவ்.

தென்கருணை ஆகவன் இளைஞர் மன்றத்தினரின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. தியாகேஸ்வரன், செயலாளர்: திரு. செ. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: திரு. சி. மகாலிங்கம். 6 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும்தெரிவுசெய்யப்பட்டது.

0 0

உடுப்பிட்டி, செவ்.

தென்மராட்சி ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் உசன் இராமநாதன் மகாவித்தியாலயப் பதிலதிபர் திரு. வி. கே, நடராசா தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு வே க நடராசா, துணைத்தலைவர்கள்: திரு ஏ எஸ் பாலரத்தினம். திரு கே மகேஸ்வரன், செயலாளர்: திரு எம் அருளானந்தம், துணைச்செயலாளர்: திரு ஏ சிவலோகநாதன். பொருளாளர்; திரு சி கனகலிங்கம், கணக்குப் பரிசோதகர்: திரு எம் வைத்திலிங்கம்.

வடமாகாண ஆசிரிய சங்க நிர்வாகசபைக்குத் திரு வி கே நடராசா, திரு எம் அருளானந்தம், திரு சி கனகலிங்கம் ஆகியோரும் தேசிய ஆசிரியர்சங்கநிர்வாகசபைக்குத் திரு வே க நடராசாவும் தென்மராட்சி ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0

பருத்தித்துறை, செவ்

வரணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர்சங்க நிர்வாகிகள் வருமாறு:

தலைவர் திரு கே தம்பிஐயா, உபதலைவர்: திரு வி கந்தசாமி, செயலாளர் திரு ஏ மாணிக்கம், உபசெயலாளர் திரு எம் கிருஷ்ணன், பொருளாளர் திருமதி ரீ சிதம்பரப்பிள்ளை, நாலுபேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும்தெரிவுசெய்யப்பட்டது.

0 0

வேலணை, செவ்

வேலணை மேற்கு சாந்திய சனசமூக நிலையத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு க செல்வநாயகம், உபதலைவர் திரு சி சரவணபவான், இணைச்செயலாளர்கள் திரு ந பாலச்சந்திரன், திரு சி உலகநாதன், பொருளாளர் திரு சோ இந்திரலிங்கம், துணைப் பொருளாளர் திரு வை குணசிங்கம், 17 பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 2-ம் திகதி (18-8-71)

மேஷம்- புதிய சேணத்திலிருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு துணிவையே துணையெனக் கொண்டு காரியங்களைச் சிறப்பாகச்செய்வீர்கள்.

ரிஷபம்- வாய்வுக் கோளாறு உடல்நடத்தை பாதிக்கலாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும் தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு.

மிதுனம்- இனசந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும் மனக்குழைச்சல்களினால் வேதனைப்படுவீர்கள் தெய்வநம்பிக்கைவேண்டும்.

கடகம்- பெரிய இடத்து சிநேகம் இன்று ஏற்படலாம்: சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு.

சிம்மம்- உறவுமுறைகளில் பிளவுகளே தென்படும் மனநிலை உற்சாகம் குன்றும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

கன்னி- இலாபகரமான தொழிலில் முதலீடுசெய்வீர்கள். வாகனச்சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும்.

துலாம்- புத்திரவழியால் புகழுக்கு இடமுண்டு. புதிய பாதையில் நடைபோடுவீர்கள் பொதுவாக இன்று நல்லதினம்.

விருச்சிகம்- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம் உடல்நலத்தைப்பேணவும், எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும்.

தனுசு- யோகமென்ற மனதுடன் செயலாற்றுவீர்கள் கனவிலுவழியில் பெருமைகள் வந்துசேரும் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

மகரம்- எண்ணியதில் தடைகள் தோன்றும் ஏமாற்றம் தாக்கும் நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

கும்பம்- இதயம் இன்று இன்பத்தால்துள்ளும், குடும்பத்தில் இன்று உறவுமுறைகள் அன்புகொண்டதாக இருக்கும்.

மீனம்- வெற்றிப் பாதையில் விறுநடை போடுவீர்கள், தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் இன்று சுபதினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## நியமனம்

அராலி, செவ்

வட்டுக்கோட்டை கி ச உறுப்பினர் திரு வெற்றிவேற்பிள்ளை யோகேஸ்வரன் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி கமிட்டி உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார்

இவர் தற்போது வட்டுக்கோட்டை கிராம ஆஸ்பத்திரியின் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராகவும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், சதுசலா, அரசாங்க சந்தைப்படுத்தும் பகுதியினரால் நடாத்தப்படும் கடைகள், சேகரிப்பு நிலையங்கள் ப நோ கூ சங்க கடைகள் கிளைகள் ஆகியவற்றின் பார்வையாளராகவும் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் வட்டுக்கோட்டை தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளையின் தலைவராகவும் கடமையாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா கொலைவழக்கு எதிரிகள் விடுதலை

மாங்கிட்டபுரம், செவ்.

வவுனியா கொலைவழக்கில் வவுனியா மாஜிஸ்திரேட் திரு. எஸ். விக்கிரமசூரியா எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் வவுனியா நச்சன்குளத்தை சேர்ந்த தோப்புக்காரன் செல்லன் பூலன் என்பவரைக் கொலை செய்ததாக, வேப்பங்குளத்தை சேர்ந்த இராசையா தனபாலசிங்கம் வவனியாவைச் சேர்ந்த தம்பிமுத்து சண்முகராசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர்களான ஆர். ஜே. செல்வரத்தினம், கே. குணரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள்.

சி. தர்மலிங்கம் இ, ஜெயசோதி ஆகியோர் சாட்சியமளித்ததை தொடர்ந்து மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்.

## 462 ரூத்தல் வெங்காயம் பறிமுதல்

சாய்ந்தமருது செவ்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வரப்பட்ட சுமார் 462 ரூத்தல் வெங்காயம் செங்கலடியில் வைத்துக் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட வெங்காயத்தை ஏறாவூர்ப்பற்று காரியாதிகாரி திரு, எம் கே சங்கரதாஸ் ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூலம் பொது மக்களுக்கு விநியோகம்செய்யஉத்தரவு பிறப்பித்தார்

## தலைமையாசிரியர் இல்லை

சாய்ந்தமருது, செவ்.

பொத்துவில் மெ மி பாடசாலையின் தலைமை ஆசிரியர் அண்மையில் ஒய்வுபெற்றுச் சென்றதால் அவருக்குப் பதிலாக இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை.

புதிதாகத் தலைமை ஆசிரியர் நியமிக்கப்படாததை யிட்டுப் பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் கவலை அடைந்துள்ளனர்

## செப்டம்பர்முதல் செயல்படும்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் புனரமைப்புத்திட்டம் செப்டம்பர் முதலாந்திகதிமுதல் செயல்படுத்தப்படும்.

இத்தகவலை மேற்படி கூட்டுத்தாபன தலைவர் திரு சுசில் முனசிங்கா தெரிவித்துள்ளார். (சி பி ஏ)

## ரஷ்ய நிபுணர்குழு

கொழும்பு, செவ்வாய்

ரஷ்யாவின் உதவியுடன் ஒருவெலையில் நிறுவப்படும் உருக்குத் தொழிற்சாலையின் 2-ம் கட்ட வேலைக்கான திட்டங்களை பூரணப்படுத்த ரஷ்ய நிபுணர் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

(சி. பி. ஏ.)

## சுகாதாரப் படக்காட்சி

மண்டைதீவு, செவ்

அல்லைப்பிட்டி மண்டைதீவுப் பகுதிகளுக்கு சுகாதாரப் பரிசோதகரா கவுள்ள திரு. அல்போன்ஸ் என்பவரின் முயற்சியினால் நேற்று பிற்பகல் மண்டைதீவு பிள்ளையார் கோவிலடியில் சுகாதாரப் படக்காட்சி ஒன்று காண்பிக்கப்பட்டது

## கூட்டு ஸ்தாபன ;சட்ட வேலைகள்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க கூட்டுஸ்தாபனங்களின் சட்ட வேலைகள் யாவும் அட்டோர்னி ஜெனரல் இலாகாவினாலேயே கவனிக்கப்படவேண்டும் என்ற தீர்மானமொன்றை நீதியமைச்சு தற்போது ஆராய்ந்துவருகிறது.

தற்போது எல்லாக் கூட்டுஸ்தாபனங்களுக்கும்சொந்த சட்ட இலாகாவும் சட்ட ஆலோசகர்களும் உள்ளனர். இதனால் செலவு அதிகமாவதாலேயே மேற்படி தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது (சி-பி-ஏ)

## நல்லூரில் இன்று

மாலை 6-15 மணிமுதல் திருப்புகழ் மண்டபத்தில் திருமதி சரோஜினி தனபாலசிங்கம் பக்திப் பாடல்கள் பாடுவார்கள். இரவு 9-30 மணிமுதல் திரு. என். கே. பத்மநாபன் குழுவினரின் மங்களவாத்தியக் கச்சேரி நடைபெறும். இரவு 10-30 முதல் சங்கீத வித்துவான் திரு. பரம்திலகராஜாவின் சங்கீதக் கச்சேரி நடைபெறும்

இரவு 11-30 முதல் திருவிளையாடல் தொடர்ச்சியிலே சிவலிங்கசாட்சி எனும் பகுதி ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளால் இன்னிசை விரிவுரை நடத்தப்படவுள்ளது.

## 460 கோடி...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

காது என்றனர்.

### புதுமை வண்ணம்

விண்வெளி வீரர்கள் அம்புலியில் பார்த்த ஒரு பாறையின் வண்ணம் ரோஜா வண்ணம் என்று கூறினர். இதன் மாதிரியை அவர்கள் கொண்டு வந்திருக்கின்றனர். விஞ்ஞானிகள் இதனைப் பார்க்க ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர். இந்த அம்புலிக் கல்லை பூமியில் பார்க்கையில் அதன் வண்ணம் எப்படி இருக்கிறது அம்புலியில் பார்த்ததுபோல்சரியாகஇருக்கிறதா அல்லது வேற்றுமை உண்டா என்பதை அறிய வாய்ப்புஏற்படும். அம்புலியில் விமானிகள் இந்தக் கல்லைப் பொன்னிற சூரியக் கண்ணாடிபோட்டுக்கொண்டு பார்த்தனர் மேலும் அம்புலியில் ஒளியைச் சிதறச் செய்யும்காற்று வேறு இல்லையல்லவா?

அப்பலோ-15 விமானிகள் கொண்டுவந்த அம்புலி மாதிரிக் கற்கள்தான் மற்றவர்கள் கொண்டுவந்ததைவிட மிக மிக அதிகம் என்றனர் விஞ்ஞானிகள்.

மொத்தம் 170 ரூத்தல் எடையுள்ளகற்கள் கொண்டு வந்துள்ளதாக அப்பலோ-15 விமானிகள் கூறுகின்றனர். எல்லா மூட்டைகளையும் பிரித்து கற்களை நிறுத்தபின்னர்தான் துல்லியமான எடை தெரியும்.

## உபதலைவர்

சாய்ந்தமருது, செவ்.

ஒட்டமாவடி கிராமசபையின் உபதலைவராக மேற்படிசபையின் 5 ம் வட்டார உறுப்பினர் ஜனாப் எம். மீராசஹிப்பு தெரிவுசெய்யப்பட்டார்

3-ம் வட்டார உறுப்பினர் ஜனாப் எம் ஹஜ்ஜி முகம்மது இவரின் பெயரைப் பிரேரிக்க 1-ம் வட்டார உறுப்பினர் ஜனாப் எம் ஐ ஹபீபு முகம்மது ஆமோதித்தார்

## மணிவாக்கு

தன் வாழ்நாளைத் தன் நலத்துக்கும், தன் சந்தோஷத்துக்குமே செலவழிப்பவன் உண்மை வாழ்க்கையை இழப்பான்.

—விவேகானந்தர்.


# ஈழநாடு

Belan ou National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண வருஷம் ஆவணி மாதம் 2-ந் திகதி (18 - 8 - 71)


## தேச பக்தன் மறைவு

டாக்டர் இ. மு. வி. நாகநாதன் மறைந்தார் என்ற செய்தி தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள மனித இதயம்படைத்த மக்கள் அனைவருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். கலங்காத கண்கள்கூட கலங்கி நீர்வடித்திருக்கும். மக்களுக்காக தனது உடல் பொருள் ஆவியை உண்மையில் அர்ப்பணித்தவர்கள் வெகுசிலர். அந்தச் சிலருள் டாக்டர் நாகநாதன் முன்னணியில் நின்றார் என்று சொல்லலாம். டாக்டர் நாகநாதனின் மறைவு தமிழ் அரசுக் கட்சிக்கோ தமிழ் பேசும் மக்களுக்கோ மட்டும் ஏற்பட்ட இழப்பல்ல தன்மானத்துடன் வாழவிரும்பும் மனித குலத்துக்கே ஏற்பட்ட பேரிழப்பாகும்.

டாக்டர் நாகநாதன் இலங்கையில் கல்வி கற்றபின் இங்கிலாந்து சென்று டாக்டர் படிப்புப் படித்தார். அக்காலத்தில் இந்திய விடுதலை இயக்கம் ஒன்று லண்டனில் ஆரம்பமாகியிருந்தது. அந்த இயக்கத்தில் டாக்டர் நாகநாதன் சேர்ந்து இந்திய விடுதலைக்காகப் போராடினார். இந்தியா விடுதலையடைந்தால் இலங்கையும் அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுதலையடைய முடியுமென அவர் நம்பினார். டாக்டர் பட்டம் பெற்று தாய்நாடு திரும்பிய டாக்டர் நாகநாதன் இலங்கையின் விடுதலைக்காகவும் உழைத்தார். இலங்கை சுதந்திரமடைந்தாலும் இலங்கை வாழ் சிறுபான்மையினத்தவருக்குப் பூரண சுதந்திரம் கிடைக்கமாட்டாதென்பதையும் பெரும்பான்மையினர் ஆளும் வர்க்கமாகவும் சிறுபான்மையினர் ஆளப்படும் வர்க்கமாகவும் இருக்கவேண்டிய சூழ்நிலை உருவாவதைக் கண்டு சிறுபான்மையினரின் விடுதலைக்கான இயக்கத்தில் ஈடுபட்டார். இந்த இயக்கம் பீடிமனைத்திலிருந்து விலகுவதைக் கண்டு திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், அமரர் வன்னியசிங்கம் ஆகியோருடன் சேர்ந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்து இறக்கும்வரை உழைத்து வந்தார்.

தமிழ்க்காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சிகளிலிருந்து சிறுபான்மையினரின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் டாக்டர் நாகநாதன் போராடி வந்தபோதிலும் பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கெதிராக அவர் வகுப்புவாதத்தைத் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் பெறுவதற்கு முயற்சி செய்யவில்லை. சிங்கள மக்கள் தலைவர்கள், அவர்கள் தமிழ் மக்களின் சகோதரர்கள் என்றே கூறிவந்தார். சோஷலிச அரசியல் அமைப்புத்தான் சிறுபான்மையினரைத்தொடர்ந்தும் அவர்களது சொந்த நாட்டிலேயே அடிமைகளாக்குகிறது என்றும் அரசியல் அமைப்பை மாற்றவேண்டுமென்றும் அவர் போராடினார்.

சிங்களத் தலைவர்களின் வீடுகளுக்குள்ளும் சரி சாதாரண சிங்கள மக்களின் வீடுகளுக்குள்ளும் சரி சமையலறைவரை சென்று நட்புடன் உறவாடக்கூடிய தன்மையைப்பெற்றிருந்த ஒரேயொரு தமிழ்த் தலைவர் டாக்டர் நாகநாதன் என்றே சொல்லவேண்டும்.

தாம் சரியென்று கருதுவதை ஒளிவுமறைவின்றி பட்டவர்த்தனமாகச் சொல்லும் திறந்த மனதும், நியாயத்துக்கும் நீதிக்கும் எந்த இடத்திலும் எவருடனும் வாதாடும் வல்லமையும், இன, மத, சாதி வேறுபாடின்றியும் கட்சி வேறுபாடு, உயர்வு தாழ்வு இன்றியும் எல்லோருடனும் அன்பாகப் பழகும் பரந்த மனப்பான்மையும் கொண்டு வாழ்ந்தவர் டாக்டர் நாகநாதன். உரிமைப் போராட்டங்களில் ஈடுபட்டு அடியும் உதையும் பட்டு, தடுப்புக் காவலில் சிறைவாசம் அனுபவித்து நோய்வாய்ப்பட்டு 'இரும்பு மனிதர்' என்று பெயர் பெற்ற தனது உடலை அரும்பாக்கிக் கொண்டவர்.

எந்த விஷயத்தையும் கணநேரத்தில் கிரகித்து அவற்றுக்குத் தகுந்த ஆலோசனை சொல்லக்கூடிய சிந்தனையாளர். சிறந்த பேச்சாளர். செனட்டராகவும் நல்லூர்த் தொகுதியின் ஆட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றி இலங்கையின் ஆட்சிமன்ற ஜனநாயகத்துக்கு பங்கு செலுத்தியவர்.

வைத்தியத்துறையில் பெயரும் புகழும் பெற்றவர். நிறையப் பணம் சம்பாதித்தவர். தேடிய பொருளையெல்லாம் மக்களுக்காகச் செலவிட்டவர்.

இத்தகைய சிறந்த பண்பெல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற டாக்டர் நாகநாதன் சிறுபான்மையினரின் உரிமைக்காகத் தமிழ்க் கட்சிகளில் சேர்ந்து உழைத்ததால் அவரை ஒரு 'வகுப்புவாதி' எனப் பிற்காலத்தில் சிலர் கூறிய போதிலும் அவர் உண்மையில் ஒரு தேசபக்தன் என்பதை அவரை அறிந்த அனைவரும் ஒப்புக் கொள்வர்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சிறுபான்மைத்தமிழர்

# பிரச்னைகளை நன்கு உணர்ந்த தலைவர்

யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. நா. த. செல்லத்துரை விடுத்துள்ள இரங்கல் செய்தியில், டாக்டர் நாகநாதன் மகாத்மா காந்தியைப் போல் தமிழ் மக்களின் உரிமைக்காகப் பாடுபட்டார் என்று குறிப்பிடுகிறார். அவர் விடுத்துள்ள செய்தி வருமாறு:

தாழ்த்தப்பட்ட மக்களின் இரட்சகராக வாழ்ந்த பெருந்தலைவர் டாக்டர் நாகநாதனின் மறைவு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பேரதிர்ச்சியாகவே இருக்கும். மகாத்மா காந்தி எப்படி தம்மை ஒரு ஹரிஜன் எனக் கருதினாரோ அவ்விதமே இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைக்காக அல்லும் பகலும் அயராது செயலாற்றி வந்த டாக்டர் நாகநாதனும் தம்மை சிறுபான்மைத் தமிழ் மக்களுள் ஒருவனாக மதித்து அவர்களது சகோதரனாக நடந்தார். நாகநாதன் மறைவால் இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலை இயக்கம் வெகுதும் பாதிக்கப்படப் போவது உண்மையே என்றாலும் சிறுபான்மைத் தமிழ் மக்களின் முன்னேற்றம் இன்னும் அதிகமாகப் பாதிக்கப் போகிறதே என வேதனையடைகிறேன். சிறுபான்மைத்தமிழர் பிரச்னைகளை டாக்டர் நாகநாதனிலும் பார்க்க அதிகமாக உணர்ந்தவர்கள் வேறு யாரும் இடையாது. டாக்டரின் மறைவால் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளேன்

## போராடுவதற்கு—

5-ம் பக்கத் தொடர்ச்சி

கருமானத்தைப்பெற விரும்புவதில்லை. அநேகமாக இவரது வைத்திய சேவை இலவசமாகவே இருக்கும். அப்படிப்பெறும் பணமும் கட்சியின் தமிழ் இனத்தின் சேவைக்கே போய்விடும்.

நேரம் காலம் பார்க்காது எந்நேரமும் தன்னை நாடிவரும் எவருக்கும் வேண்டியது செய்து அனுப்புவார்

### ஆயுதத்துக்கும் நியாயவாதத்துக்கும் அஞ்சாதவர்

ஆயுதத்துக்கும், நியாயவாதத்துக்கும் அஞ்சாத இவர் துரிதமாகத் திட்டங்கள் தீட்டுவதிலும் அவற்றை உடனடியாகச் செயல்படுத்துவதிலும் சாதுரியம் மிக்கவர், எந்த ஒரு விஷயத்தையும் ஞாபகத்தில் வைத்துச் செயலாற்றிவிடுவார். எதிர்க்கட்சியினரின் கேள்விக்கணைகளுக்கு உடன்பதில்சாட்டை அடிகொடுக்கக்கூடிய வல்லமை இவருக்கேயுண்டு எந்த விதண்டாவாதத்துக்கும் சளைக்காது தகுந்த உதாரணங்களோடு பதிலிறுத்துவிடும் வாக்குவல்லமை மிக்கவர்

மேலும் சிங்கள மக்களோடும் தலைவர்களோடும் நெருங்கி உறவாடி அவர்களோடு சகல துறைகளிலும் பங்குபற்றி செயலாற்றிய தமிழ்த் தலைவர் இவர். இவரைப் போன்று மற்றத் தமிழ்த் தலைவர்கள் பழகிச் சிநேகமாகவிருந்தார்கள் எனக்கூற முடியாது.

இத்தகைய சிறந்த தேசியவாதியை, தமிழ்த்தலைவரை அஞ்சாநெஞ்சரை. தியாகியை நாடும், குறிப்பாகத் தமிழினமும் இழந்து இன்று துயரக்கடலில் மூழ்கியுள்ளது அவரின் இழப்பு நாட்டுக்கும் தமிழ்மக்களுக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு அன்னாருக்கு நாம் செய்யவேண்டியது ஞாபகச்சின்னம் அமைப்பதோ, சிலை நிறுவுவதோ அல்ல அவரின் அஞ்சாமை, துணிவு, வீரம், தியாகம் போன்ற இன்னோரன்ன நல்ல அம்சங்களைக் கடைப்பிடித்து எமது உரிமைகளுக்காக அவர்வழி போராடுவதேயாகும். இதற்காக அவர் நினைவை நிலைநிறுத்த நாம் ஒவ்வொருவரும் நம் நினைவில் அவருக்கோர் நினைவுச்சின்னம் நிறுவவேண்டும். இதுவே நாம் அவருக்குச் செய்யும் கைமாறும் நன்றியும் ஆகும்.

## துக்கப்பாடல் பூசை

யாழ்ப்பாணம், புதன் காலஞ்சென்ற டாக்டர் இ. மு. வி. நாகநாதனின் ஆத்ம சாந்திக்காக நாளை வியாழக்கிழமை காலை ஆறு மணிக்கு யாழ்ப்பாணம் அடைக்கல மாதா தேவாலயத்தில் துக்கப்பாடல் பூசையொன்று ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

ஆஸ்பத்திரி ஊழியர்

## லஞ்சம் கேட்டாராம்

மண்டைதீவு, செவ்: மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையில் மருந்து கலக்கும் ஊழியர் ஒருவர் மருந்து வாங்கவந்த வயோதிபர் ஒருவரிடம் பணம் கொடுத்தால்தான் மருந்து தரப்படும் என்றாராம்.

இதைக் கேட்ட அவ்வயோதிபர் உடனடியாக வைத்திய அதிகாரியிடம் சென்று முறையிட்டாராம். இதுபற்றி தாம் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி தாமே நேரில் சென்று வயோதிபருக்கு மருந்து வாங்கி வைத்தியர் கொடுத்தாராம்.

இவ் ஊழியர் பலதடவைகள் இம்மாதிரி வயோதிபர்களிடம் பணம் வாங்கியுள்ளாரென்றும் தற்பொழுது தெரிய வந்துள்ளது.

நத்தம, செவ்வாய்: நத்தம பொலிஸ் பகுதியில் ஒவகந்த என்ற இடத்தில் பஸ் ஒன்றினால் மோதுண்டதாகக் கூறப்படும் இருவர் அந்த இடத்திலேயே மரணமாகியுள்ளனர். இது சம்பந்தமான சந்தேகநபர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# நாவற்குளி வீடமைப்புத் திட்டம்

சி. கந்தமூர்த்தி — காரியதரிசி

பதின்மூன்று வருடங்களாக குடியிருக்கும் நிலம் கிடைக்குமோ என ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நூற்றுக்கணக்கான அங்கத்தவர்களுக்கு இலங்கையிலேயே மிகப்பெரிய வீடமைப்புச் சங்கம் இன்று திருவுளச்சீட்டு இழுத்து காணித்துண்டுகளை வழங்குகின்றது

1958-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் திகதி இலங்கை வீடமைப்புச் சங்கம் உருவாக்கப்பட்டது இன்று பதின்மூன்று வயதுப் பருவமங்கையாக இருக்கும் இச்சங்கத்தின் நோக்கம் இன்று பூர்த்தியாகின்றது.

1958-ல் ஆரம்பமான இச்சங்கம் தனது அங்கத்தவர்கள் குடியிருப்பதற்கெனக் காணியைப்பெற்றுக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டு நாவற்குளியில் ஓர் தென்னந்தோட்டத்தைத் தெரிவு செய்தது. இக்காணியைச் சுவீகரிப்பதில் கடந்த பதின்மூன்று வருடங்களிலும் பல்வேறு படிகளில் பலவேறு பிரச்சினைகள் முளைத்தெழுந்தன. கடந்தகாலங்கள் கஷ்டங்களும் சோதனைகளும் நிறைந்தனவாகக் காணப்பட்டாலும் முளைத்தெழுந்த பல முட்டுக்கட்டைகளையும் தாண்டி இன்று தனது 258 அங்கத்தவர்களுக்கும் காணி வைப்பகிர்ந்து கொடுப்பதையிட்டுப் பெருமையடைய வேண்டும்.

97 ஏக்கர் ஒரு பரப்பு விஸ்தீரணமுடைய நாவற்குளி வீடமைப்புத்திட்டம் ஒரு புதிய நகரை உருவாக்கி வருகின்றது

இத்திட்டத்தில் வீடுகளுக்கு மாத்திரமல்ல பாடசாலை விளையாட்டிடம். சந்தை, கடைகள், பஸ்தரிப்பு நிலையம், வீதிகள் ஒருங்கமைந்த விளையாட்டிடமும் இடவசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. தண்ணீர் வசதி. மின்சாரவசதி, வடிகால் வசதிகள் அளிக்கத்திட்டமிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு அங்கத்தவருக்கும் குறைந்தது 6 பரப்புக் காணி கிடைக்கக்கூடியதாகக் காணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. எதிர்கால சந்ததியினரின் நலனை முன்னிட்டு சிறந்த நகரை உருவாக்க நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

## தங்குமட வசதி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் ரயிலில் மேலதிக பெட்டிகள் இணைக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

## அனுதாபத் தந்தி

யாழ்ப்பாணம் புதன் சிறந்த தலைவர் ஒருவரை இழந்துவிட்டோம். போராட்டத்திற்குப் பின்வாங்காது எதையும் துணிச்சலுடன் செய்துமுடிக்கும் டாக்டர் நாகநாதனின் மறைவு தமிழினத்திற்குப் பேரிழப்பாகும் என்று யாழ் மாநகரசபை உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் டாக்டரின் குடும்பத்தினருக்கு அனுப்பிவைத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பெருமாள் கோயில் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம் புதன் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் மண்டல பிஷேகம் இன்று மகா சங்காபிஷேகத்துடன் முடிவடைகிறது. இன்றிரவு நடைபெறும் புன்னாரத்திருவிழா எட்டு மணிக்கு முடிவடையுமென ஆதீன கர்த்தர்கள் தெரிவிக்கிறார்கள்.

## முஜிபுருக்கு ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாமி ஆகியோர் உட்பட 200 வழக்கறிஞர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

## நல்லூர்

2-ம் பக்கத் தொடர்ச்சி

குழந்தைகளுடன் வரும் பெற்றோர் அவர்களைத் தங்களுடனே வைத்திருக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்

அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெற்றாலோ, சந்தேகத்துக்கு ஏதுவாக யாரும் நடந்தாலோ அருகிலுள்ள பொலிஸாருக்கு அறிவித்து ஒத்துழைக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேர் உற்சவம் நாளை நடைபெறும்.